**පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 290**
**ආයතනයේ නම: විදේශ කටයුතු අමාත්‍යාංශය**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

**பாராளுமன்ற வெளியீட்டுத்தொடர் இலக்கம்: 290**
**நிறுவனத்தின் பெயர்: வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**

பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் நிறுவனங்களுக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அதுதொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

**Parliamentary Series No: 290**
**Name of the Institution: Ministry of Foreign Affairs**

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4)

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 290**
**நிறுவனத்தின் பெயர் : வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**

**<u>பகுதி 1</u>**

| | இக்குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளுக்கான விளக்கங்கள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை/ தற்போதைய நிலைப்பாடு |
|---|---|---|
| 01. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை. | வெளிநாட்டு தூதரக பணியகங்களிலிருந்து தகவல் சேகரிக்கப்படவேண்டும் என்பதால், பொதுவாக, கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்கள் வழங்குவது தாமதப்படும். அத்துடன், 2021 காலப்பகுதியில் கொவிட்-19 நோய்ப்பரவல் சூழ்நிலை காரணமாக, தேவைப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதில் சிக்கலை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனபோதிலும், இறுதியில் இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தில் இவ்விடயம் பற்றி கலந்துரையாடப்பட்டு, ஒரு மாதத்தினுள் தேவையான அல்லது இடைக்கால பதில்களை அனுப்புவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்தபோதிலும் காலத்தை நீடிப்பதற்கு கோரிக்கை விடப்பட்டது. |
| 02. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 2 கூட்டங்களையாவது நடத்தியிருக்கவில்லை. | நாட்டில் நோய்ப்பரவல் சூழ்நிலை காரணமாக, 2021 இல் குழு கூட்டத்தைக் கூட்டுவதில் பிரச்சனைகள் எதிர்கொள்ளப்பட்டது. ஆனபோதிலும், நாடு சாதாரண நிலைமைக்கு வந்ததும் 2023 இல் மூன்று கூட்டங்கள் இடம்பெற்றன. 2024 இல் சுற்றறிக்கையின் தேவைப்படி, கூட்டத்தை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 03. | 2017.06.26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்களுக்கான முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7ஆம் பிரிவின் பிரகாரம் 2018ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துகள் மற்றும் விற்றொழித்தல்கள் பற்றிய தகவல்கள் கொம்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படாமை. | கோப்பு பதிவுகளின்படி, கொழும்பிலுள்ள அமைச்சின் தலைமை அலுவலகம் பற்றிய தகவல்கள் மட்டுமே, கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனபோதிலும், வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக பணியகங்கள்/ பதவிகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும். |
| 04. | 2017.06.26ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்துக்களுக்கான முகாமைத்துவ சுற்றறிக்கையின் 13ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்பாடுகள் நடைமுறைப்படு படுத்தப்படுதல் இணைப்பாக்கம் செய்யப்படுவதற்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து கொம்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்காமை | அரசாங்க துறை நிறுவனங்களுக்கான நிதிசாரா சொத்து முகாமைத்துவ முறைமை (NFAMS) - வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகங்கள்/ பதவிகளுக்கான வாகனங்கள் பற்றிய தொகுதி, இணைய அமைப்பினை நடைமுறைப்படுத்துவதில் கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பதற்காக ஒரு பதவி நிலை அதிகாரி நியமிக்கப்பட்டார்.<br><br>இவ்வமைச்சின், வெளிநாட்டு சொத்து முகாமைத்துவ பிரிவானது, கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து, குறித்த இணைய அமைப்பில் வாகனங்களின் விபரங்களை தரவேற்றம் செய்யும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 05. | 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஒ. 756 (6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை. | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான ஆய்வுச்சபை அறிக்கைகள் ஏற்கனவே கணக்காய்வாளர் நாயகம் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டன. 2023 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு தூதரக பணியகங்களிடமிருந்து ஆய்வு அறிக்கைகளைப் பெறுவதில் வெளிநாட்டு சொத்து முகாமைத்துவ பிரிவு ஈடுபட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஆவணங்கள் உரிய நேரத்தில் கணக்காய்வாளர் நாயகம் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும். ஆய்வுச் செயன்முறைகளை துரிதப்படுத்துவதற்காக, இலங்கை தூதரக பணியகங்களுடன் தொடர் நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 06. | வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை. | இவ்விடயம் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| 07. | ஒதுக்க வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப் படவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்கான வாகனங்களின் தினசரி பதிவுகள் மற்றும் மாதாந்த தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வு நாயகத்தின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது இனங்காணப்பட்டுள்ளது. ஆனபோதிலும், 2022 ஆம் ஆண்டுக்கான விபரங்கள் அனுப்பப்பட்டன. 2023 ஆம் ஆண்டுக்கான விபரங்கள் சேர்க்கப்பட்டு, கணக்காய்வாளர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்குத் தயாராகவுள்ளது. |
| 08. | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.ஒ. 103,104,109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2021இல் 13 வாகன விபத்துக்களும் 2022 இல் 11 வாகன விபத்துக்களும் இடம்பெற்றன. இவ்விபத்துக்கள் தொடர்பான முழு பழுது பார்த்தல் கட்டணங்களும் காப்புறுதி நிறுவனங்கள் மூலம் அறவிடப்பட்டன.<br>2023 இல் 25 வாகன விபத்துகள் இடம்பெற்றன. அவற்றுக்கான இழப்பீடுகள், சம்பந்தப்பட்ட காப்புறுதி கொள்கைகள் மூலம் மீளப்பெறப்பட்டன.<br><br>அந்த விபத்துகள் தொடர்பான நிதிசார் விதிமுறை விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருகின்றது. |
| 09. | 2016.12.29ஆம் திகதிய 2016/30ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படாமை. | 2021 முதல் 2023 வரையான காலகட்டத்தில் கொவிட்-19 நோய்ப்பரவல் மற்றும் அதைத்தொடர்ந்த எரிபொருள் தட்டுப்பாடு ஆகிய காரணங்களால் எரிபொருள் பாவனை பரிசோதனை சாத்தியப்படவில்லை. 2024 இற்கான எரிபொருள் பாவனை பரிசோதனை மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| 10. | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முந்திய ஆண்டுகளிலிருந்து காணப்பட்டு வந்த செயற்படாத வங்கி கணக்குகள் தீர்க்கப்படவில்லை. | லிபியா, திரிபோலியிலுள்ள இலங்கை தூதரகம் எதிர்பாராமல் மூடப்பட்டதால், அத்தூதரகத்தின் வங்கி கணக்கு செயலற்றதாக அறிவிக்கப்பட்டது. நாம் தற்சமயம் சம்பந்தப்பட்டவர்களுடன் இணைந்து தேவையான தகவல்களைத் திரட்டி வருகிறோம். அடுத்த மூன்று மாதங்களுள் தேவையான ஆவணங்களை பொது திறைசேரியில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை நாம் எடுப்போம். இதில் கணக்கை மூடுதல் அல்லது அது தொடர்பானவற்றை அகற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கலாம். |
| 11. | வங்கி இணக்க கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்ட, சீராக்கல் செய்யப்படவேண்டிய மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின்படி செயலாற்றி குறித்த மீதிகள் ஒருமாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தேவைப்பட்ட தகவல்கள் கிடைக்காமையாலும் எமது கட்டுப்பாட்டை மீறிய சூழ்நிலைகள் எழுந்தமையாலும் தாமதங்கள் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.<br>மொத்தமாக பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூ. 1,458,855.52 மற்றும் ரூ. 5,746,953.70 இணக்கப்படுத்தப்பட்டது. (***இணைப்பு-1***)<br><br>வங்கி இணக்கப்பாடு தொடர்பாக நிதி விதிமுறை மற்றும் சுற்றறிக்கை தேவைகளுக்கு அமைவாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. |
| 12. | ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட தொகைகள் நீண்டகால நிலுவைகள் மற்றும் தேவையான தகவல்களை போதுமான அளவு வழங்காததே காரணமாகும். மேலும், எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் நிலைமைக்கு பங்களித்தன. 31 டிசம்பர் 2021 வரை ரூ. 1,302,276.87 இணக்கப்படுத்தப்பட்டது. ***(இணைப்பு4).*** மீதமுள்ள நிலுவைகள் தொடர்பான தகவல்கள் தற்போது சேகரிக்கப்பட்டு, அதற்கேற்ப தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| 13. | காலாவதியான வைப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேவையான தகவல்கள வெளிநாட்டு தூதரக பணியகங்களிடமிருந்து பெறுவதற்கு நேரம் போதாமையால், நிதி விதிமுறை 571 இல் விளக்கப்பட்டவாறு தேவைப்பட்ட நடவடிக்கையை நிறைவேற்ற முடியவில்லை. 31 டிசம்பர் 2021 வரையுள்ள தொகைகள், விதிமுறையின்படி இணக்கப்படுத்தப்பட்டன. (**இணைப்பு 2, 3**) |
| 14. | நி.ஒ. 371 இன் பிரகாரம், வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை. | நடவடிக்கைகள் நிதிவிதிமுறைகளுக்கு இணங்கியிருந்தால், அதன் காரணமான நிகழ்வுகள் எமது கட்டுப்பாட்டை மீறிய சூழ்நிலைகளால் நிகழ்ந்தன.<br><br>பெறப்பட்ட தற்காலிக முன்பணத்தை செட்டில் செய்யும் போது நிதி விதிமுறை மற்றும் சுற்றறிக்கை தேவைகளை கடைபிடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 15 | அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட்டொகுதியினர் இணைக்கப்பட்டு அல்லது ஆட்சேர்ப்பு செய்யப் பட்டுள்ளார்கள். | தூதரகங்களிலிருந்து திரும்பிய அலுவலர்களையும், தூதரகங்களுக்கு இணைக்கப்பட வேண்டியவர்களையும் குறிப்பிட்ட காலத்திற்கு தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற தேவையால் அங்கீகரிக்கப்பட்ட மட்டத்திற்கு மேலதிகமாக அலுவலர்களைப் பேணுவது மிகவும் சவாலானதாகும். |

**பகுதி 2**

| | இக்குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளுக்கான விளக்கங்கள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை/ தற்போதைய நிலைப்பாடு |
|---|---|---|
| 01. | நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கிணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை. | எதிர்பாராத சூழ்நிலைகளால் இவ்வமைச்சு தனது நிலையான குறிக்கோள்களை இனங்காண்பது தாமதமானது. ஆனபோதிலும் அக்குறிக்கோள்களை இனங்காண்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கான குழு ஒன்றும் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பான நடமுறைப் படுத்தல்கள் விரைவில் மேற்கொள்ளப்படும். |
| 02. | அடையாளம் காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி நாகவருடாந்த செயலாற்றுகை அறிக்கையை உரிய முறையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. | நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி, விரைவில் தேவையான நடவடிக்கையை இவ்வமைச்சு எடுக்கும். |
| 03. | அடையாளம் காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி நோக்குகளை செயற்படுத்துவதன் மேம்பாட்டினை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை. | நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி, விரைவில் தேவையான நடவடிக்கையை இவ்வமைச்சு எடுக்கும். |
| 04. | 2018.01.24 ஆம் திகதிய பொதுநிருவாக சுற்றறிக்கை இல. 02/2018இன் ஏற்பாடுகளுக்கு இணங்க முறையான மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெரிதாக அறிந்துகொள்ளாததன் காரணமாக, குறித்த மனிதவள திட்டமானது இவ்வமைச்சின் 2021 செயலாற்றுகை அறிக்கையில் இணைக்கப்பட வில்லை. ஆனபோதிலும், மட்டுப்படுத்தப்பட்ட பாதீடு மற்றும் பிற ஏற்பாடுகளுக்குள் அமைச்சின் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. அமைச்சுக்கான மனிதவள திட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது. |
| 05. | தயாரிக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில், 50%க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்குதல் உறுதி செய்யவில்லை. | தேவையான பாதீட்டு ஏற்பாடுகள் உட்பட, தேவையான மனிதவளங்கள் போதாமையால், குறைந்தபட்ச பயிற்சி தேவைகளை இவ்வமைச்சு பூர்த்தி செய்யவில்லை. அமைச்சின் அலுவலர்களுக்கான குறைந்தபட்ச பயிற்சி தேவைகளை வழங்குவது உறுதிப்படுத்தப்பட்டது. |
| 06. | ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | விழிப்புணர்வு இன்மையால் அனைத்து அலுவலர்களுக்கும் செயலாற்றுகை உடம்படிக்கை வழங்கமுடியாமை வருந்தத்தக்கது. ஆனாலும், இந்நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகையை விரிவுபடுத்தும் நோக்குடன், அடுத்து வரும் செயலாற்றுகை அறிக்கையில் இவை நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகளை இவ்வமைச்சு செய்யும். |
| 07. | மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவும் கொள்திறன் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கும் நிறுவனத்தில் சிரேட்ட அலுவலரொருவர் நியமிக்கப் பட்டிருக்கவில்லை. | மனிதவள அபிவிருத்தி திட்டங்கள், திறன் மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்களை தயாரிப்பதற்காக ஒரு சிரேஷ்ட அதிகாரி ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளார். |

| | | |
|---|---|---|
| 08. | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | தேவையான பாதீட்டு ஏற்பாடுகள், மனித வளங்கள் உட்பட, குறைந்த வளங்கள் காரணமாக, பயிற்சி வாய்ப்புகள் திட்டமிடப்பட்டவாறு வழங்கப்பட வில்லை.<br>அமைச்சின் அலுவலர்களுக்கு குறைந்தளவு பயிற்சி தேவைகள் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப் படுகிறது. |
| 09 | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது. | சில குறைபாடுகள் காரணமாக 2021 இற்கான நிதி அறிக்கைகள் தொடர்பாக இவ்வமைச்சு ஒரு நிச்சயமற்றதானதொரு கருத்தைப் பெற்றது.<br>குறித்துக்காட்டப்பட்ட குறைப்பாடுகள் 2022 நிதியாண்டில் கவனிக்கப்பட்டு, திருத்தப்பட்டன. |
| 10. | நிதி பிரமானக் குறிப்பின் 156(1) பிரிவின்படி அதிகாரிகளால் அரசுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு அதிகாரிகள் மீது கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அரசாங்கத்திற்கு இழப்புகளை ஏற்படுத்திய அதிகாரிகள் தொடர்பில், நிதி விதிமுறை 156(1) இன்படி இழப்புகளை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 11. | அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த அதிகாரிகளை முறையாக இடமாற்றம் செய்யப்பட வில்லை. | இவ்வமைச்சு, அலுவலக ஊழியர் சேவை மற்றும் வாகன சாரதிகளுக்கு பிரபலமான நிறுவனமாகும். அந்த பிரிவிலுள்ள அலுவலர்கள் அதிகூடிய சேவையை பூர்த்திசெய்த பின்னர் இடமாற்றம் செய்யப்படுவார்கள். முகாமைத்துவ சேவை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை தேவையையொட்டி, தக்கவைத்துக்கொள்ளப்படுவர். |

**எம்.யு.எம். அலி சப்ரி, ஜனாதிபதி சட்டத்தரணி, பா உ**
**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்**